


# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5




www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 21.08.2026 • மலர் 04 • இதழ்: 233 • வெள்ளி • Edition : Nagercoil • 21.08.2026 • Vol : 04 • Issue : 233 • Page : 4 • Rs. 5/-


# முதல்வர்கள் மாநாடு: விஜய் பேசியது என்ன?

## நதிநீர், நீட், தொகுதி மறுவரையறை உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து வலியுறுத்தல்!



சென்னை: 'காவிரி விவகாரத்தில் உச்ச நீதிமன்ற தீர்ப்பை மதிக்க வேண்டும். முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தினை 152 அடியாக உயர்த்த வேண்டும். நீட் தேர்வில் தமிழகத்துக்கு விலக்கு அளிக்க வேண்டும்' என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை தென்மண்டல முதல்வர்கள் கூட்டத்தில் தமிழக முதல்வர் விஜய் வலியுறுத்தியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில், தென் மண்டலக் குழுவின் 31 வது கூட்டம், இன்று (ஆகஸ்ட் 20) கோவளத்தில் நடைபெற்றது. இந்த தென் மண்டலக் குழுவில், ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளம், தமிழ்நாடு, தெலங்கானா ஆகிய மாநிலங்களும், புதுச்சேரி, அந்தமான் & நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவு ஆகிய யூனியன் பிரதேசங்களும் உறுப்பினர்களாக உள்ளன.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தென் மண்டலக் குழுவின் தலைவராகவும், தமிழக முதல்வர் விஜய் துணைத் தலைவராகவும் உள்ளனர். இந்தக் கூட்டத்தில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார், கேரள முதல்வர் வி.டி.சதீசன், தெலங்கானா துணை முதல்வர் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய தமிழக முதல்வர் விஜய், "நீல பொருளாதார மேம்பாட்டுக்கு அண்டை மாநிலங்களுடன் இணைந்து செயல்பட தயாராக இருக்கிறோம். தென் மண்டல மாநிலங்களின் வளர்ச்சிக்கு கடல்சார் பொருளாதரத்திற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இதில் ஒருங்கிணைந்த செயல்பாட்டால்துறைமுகம், சரக்கு போக்குவரத்து, மீன்வளம், கடல் சுற்றுலா ஆகியவை மேம்படும். சரக்கு கப்பல் போக்குவரத்து விரிவாக்கம் மூலம் போக்குவரத்து செலவு குறைவது தொழில்துறையை மேம்படுத்தும். 1,076 கிலோ மீட்டர் கொண்ட கடல் வழிப் போக்குவரத்து, சுற்றுலா வளர்ச்சிக்கு மாநிலங்களுடன் இணைந்து செயல்பட தயார். போதைப் பொருளை ஒழிப்பதில் ஒருங்கிணைந்த செயல்பாடு தேவை. காவிரி விவகாரத்தில் உச்சநீதிமன்றம், காவிரி மேலாண்மை ஆணைய உத்தரவுகள் மதிக்கப்பட வேண்டும். கீழ்நிலை நீர் பிடிப்பு மாநிலங்களின் சட்டபூர்வ உரிமைகள், மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும். நதிநீர் மேலாண்மைக்காக உருவாக்கப்பட்ட அமைப்புகளின் முடிவுகள் அமல்படுத்தப்பட வேண்டும். முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டத்தினை 152 அடியாக உயர்த்த நீதித்துறை உத்தரவுப்படி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். பரஸ்பர நம்பிக்கை, அறிவியல் ஆதாரங்கள் சட்டத்தின் மீதான மதிப்போடு நதிநீர் பிரச்சினையை அணுக வேண்டும். பிளஸ் டூ தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையிலேயே மருத்துவ மாணவர் சேர்க்கை நடத்த அனுமதி வழங்க வேண்டும். மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வால் கிராமப்புற ஏழை மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். எனவே நீட் தேர்வில் தமிழகத்துக்கு விலக்கு அளிக்க வேண்டும். தொகுதி மறுவறையால் எந்த மாநிலமும் பாதிக்கப்படாது என்ற சட்டபூர்வ உறுதிமொழி தேவை. தொகுதி மறுவரையறையால் எந்த ஒரு மாநிலத்தின் பிரதிநிதித்துவம் குறையாது என மத்திய அரசு சட்டபூர்வ உத்தரவாதம் தர வேண்டும். போதைப் பொருள்களின் ஆன்லைன் விற்பனையை தடுக்க சட்ட விதிகளை கடுமையாக்க வேண்டும். மாநிலங்களுக்கிடையே உளவுத் தகவல்களை பகிர்வதன் மூலம் தென் மாநிலங்கள் இணைந்து செயல்பட வேண்டும். தென் மாநிலங்களில் ஒருங்கிணைந்த தொழிற்பேட்டைகளை அமைக்க வேண்டும். கர்நாடகாவின் பொம்மசந்திரா ஒசூர் வரை மெட்ரோவை நீட்டிக்கும் திட்டம் சிறந்த உள்கட்டமைப்பாக இருக்கும். நாட்டின் பொருளாதாரத்தில் தென் மாநிலங்கள் 30 சதவீதம் பங்களிப்பை வழங்குகின்றன. எனவே தென்மாநிலங்களின் செயல்திறன், வளர்ச்சி, முதலீடுகளை கருத்தில் கொண்டு நியாயமான நிதி பகிர்வை வழங்க வேண்டும். ஜிஎஸ்டி வரம்புகளை தீர்மானிக்கும் நெகிழ்வுத் தன்மையை மாநிலங்கள் மீண்டும் பெறவேண்டும்" என்று தெரிவித்தார்.

## கருங்கல் அருகே கேரளா தனியார் சொகுசு பஸ் சிறை பிடிப்பு; போலீசார் பேச்சுவார்த்தை

மார்த்தாண்டம், ஆக. 21

கருங்கல் அருகே உள்ள மூசாரி என்ற பகுதி வழியாக நேற்று முன்தினம் கேரள மாநிலம் கொல்லத்தை சேர்ந்த தனியார் பஸ் சென்று கொண்டிருந்தது. அந்த பஸ்ஸில் டிரைவர், கிளீனர் மட்டும் இருந்துள்ளனர். அப்போது அங்கு திரண்டு சென்ற குமரி மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள், டிரைவர்கள் இணைந்து கேரள தனியார் பஸ்சை சிறை பிடித்தினர்.

பின்னர் பஸ்சை ஓட்டி வந்த டிரைவர் இடம் விசாரித்ததில் அந்த பஸ் கொல்லத்தில் இருந்து நாகர்கோவில் பகுதியில் உள்ள ஒரு தனியார் கல்லூரி மாணவர்களை சுற்றுலா அழைத்து செல்ல வந்திருப்பது தெரிய வந்தது. குறைந்த வாடகைக்கு கேரளாவில் இருந்து பஸ் கொண்டு வரப்பட்டது தெரிய வந்தது. இது குறித்து கேரளா டிரைவரிடம் குமரி தனியார் பஸ் உரிமையாளர்கள் தகராறு செய்து கேள்வி எழுப்பினர். இதனால் அவர்களுக்கிடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இது குறித்த தகவல் அறிந்ததும் கருங்கல் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று வாக்குவாதத்தில் ஈடுபட்டவரிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இது தொடர்பாக குமரி மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள் தரப்பில் கூறுகையில்: தமிழக அரசுக்கு வருடத்திற்கு ரூ 1.30 லட்சம் வரை வரி செலுத்துகிறோம். இந்த நிலையில் கொல்லத்திலிருந்து குறைந்த வாடகைக்கு பஸ்கள் கொண்டுவரப்படுவதால் தமிழக தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. முன்பு தமிழக கேரள எல்லை வரை வந்த கேரள தனியார் பஸ்கள், தற்போது குமரி மாவட்டத்திற்கு உள்ளேயும் வந்து செல்கிறார்கள். இதனால் தான் பஸ்ஸை சிறை பிடித்தோம் என்றனர்.

அதைத்தொடர்ந்து போலீசார் கேரள பஸ் ஓட்டி வந்த டிரைவரிடம் விசாரணை நடத்தி பின்னர் பஸ்சை பறிமுதல் செய்து போலீஸ் நிலையம் கொண்டு சென்றனர். மேலும் அந்த பஸ்சுக்கு அபராதம் விதிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## தக்கலை அருகே கொலை குற்றவாளிகள் 2 பேருக்கு ஆயுள் சிறை



தக்கலை, ஆக.21

குமரி மாவட்டத்தில் குற்ற வழக்குகளில் விரைவில் விசாரணை முடித்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்வதையும் அவ்வழக்குகளில் நீதிமன்ற விசாரணையை கண்காணித்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு அளித்தல் ஆகிய செயல்பாடுகள் மூலம் குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தருவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் கடந்த 2010 ஆம் ஆண்டு மருதூர் குறிச்சி மணி என்பவரின் மகன் சாது சுந்தர்சிங் என்பவரை கொலை செய்த குற்றத்திற்காக வெளிக்கோடு பகுதியை சேர்ந்த சனேஷ் (36) புளிச்சன்விளை பகுதியை சேர்ந்த சஜீவன்(38), செவுடுவிளை பகுதியை சேர்ந்த குமார் ராஜ் ஆகியோரை தக்கலை போலீசார் கைது செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டு, குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கானது தக்கலை உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் பார்த்திபன் மேற்பார்வையில் பத்மநாபபுரம் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது.

வழக்கு நடைபெறும் போதே மூன்றாவது குற்றவாளி குமார் ராஜ் ஏற்கனவே இறந்து விட்டார். இந்த நிலையில் நீதிபதி இக்குற்றத்தில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு ஆயுள் சிறை தண்டனை மற்றும் 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து தீர்ப்பு அளித்தார்.

நீதிமன்ற வழக்கு விசாரணை மற்றும் சாட்சிகள் விசாரணை ஆகியவற்றில் சிறப்பாக செயல்பட்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கித் தர காரணமாக இருந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகள், அரசு வழக்கறிஞர், நீதிமன்ற காவலர் இந்த வழக்கின் நீதிமன்ற விசாரணையை முறையாக கண்காணித்த தக்கலை உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர், தக்கலை காவல் நிலைய ஆய்வாளர் ஆகியோரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வெகுவாக பாராட்டினார்.

## குமரி : சிறுவர்களுக்கு தலைக்கவசம் அணிவித்து இனிப்பு வழங்கிய மாவட்ட போலீஸ் எஸ் பி



நாகர்கோவில், ஆக. 21

கன்னியாகுமரி மாவட்டத்தில்சாலைவிபத்துகள் மற்றும் உயிரிழப்புகளை குறைக்கும் நோக்கில், இருசக்கர வாகன ஓட்டுநர்கள் மட்டுமின்றி, பின்னால் அமர்ந்து பயணிப்பவர்களும் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும் என மாவட்ட காவல்துறை தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

அந்த வகையில் நேற்று நாகர்கோவில் செட்டிகுளம் பகுதியில் நடைபெற்ற சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்வில், விதிமுறைகளை மதித்து தலைக்கவசம் அணிந்து பயணித்த பொதுமக்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் ஸ்டாலின் நேரில் பாராட்டினார். மேலும், தலைக்கவசம் உயிரைக் காக்கும் கவசம் என்பதை வலியுறுத்தும் விதமாகவும், சட்டத்தை மதித்து செயல்படும் பொறுப்புணர்வை ஊக்குவிக்கும் வகையிலும், உலகப் பொதுமறையான திருக்குறள் நூல் மற்றும் இனிப்புகளை வழங்கி கௌரவித்தார்.

மேலும் இருசக்கர வாகனங்களில் ஹெல்மெட் அணியாமல் பயணித்த சிறுவர் சிறுமியர்களுக்கு மாவட்டஎஸ்பிஸ்டாலின் இலவச ஹெல்மெட் கற் அணிவித்தார். "விபத்து நடந்த பிறகு வருந்துவதை விட, தலைக்கவசம் அணிந்து முன்கூட்டியே பாதுகாப்பாக இருப்பதே சிறந்தது. ஓட்டுநர் மட்டுமல்ல, பின்னால் பயணிப்பவரின் உயிரும் சம அளவில் முக்கியமானது" என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் டிஎஸ்பி இளஞ்செழியன், போக்குவரத்து இன்ஸ்பெக்டர் அருண் உட்பட பலர் பங்கேற்றனர்.

## மாவட்ட அளவில் அரசு பள்ளி மாணவர்களுக்கான கலைத்திருவிழா;மாவட்ட ஆட்சித்தலைவர் துவக்கி வைத்தார்



நாகர்கோவில், ஆக.21

கன்னியாகுமரி மாவட்ட பள்ளிகல்வித்துறையின் சார்பில் அரசு பள்ளி மாணவர்களுக்கான பல்வேறு கலைப்போட்டிகள் இளையோர்திறன் என்ற தலைப்பில் நாகர்கோவில் எஸ்.எல்.பி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. இக்கலை போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். தொடர்ந்து மாணவ மாணவியர்களிடையே அவர் பேசியதாவது:

தமிழ்நாடு அரசின் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி மாவட்ட பள்ளிகல்வித்துறையின் சார்பில் இளையோர் திறன் என்ற தலைப்பில் கடந்த சில நாட்களுக்கு முன்பாகவே அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு பள்ளிகள் அளவிலும், வட்டார அளவில் கலை, இசை, நடனம், கருவிசை, நாடகம் என நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு மாவட்ட அளவிலான கலைப்போட்டிகள் நேற்றும், இன்று 21. ம் தேதியும் நடைபெறுகிறது.

மறைந்துவரும் அரிய கலைகளை அழியாமல் காக்கவும், புதிய தலைமுறை மாணவர்களிடையே கலை ஆர்வத்தைத் தூண்டும் வகையில் மல்லர் கம்பம், அடிமுறை, சிலம்பம் போன்ற பாரம்பரிய கலைகளையும் உள்ளடக்கிய 'முதலமைச்சர் கோப்பை' போட்டிகள் நடத்தப்பட உள்ளன. இதில் மாவட்டத்தின் அனைத்து பள்ளி மாணவர்களும் அதிக அளவில் பதிவு செய்ய வேண்டும். போட்டியில் அனைத்து மாணவ மாணவியர்களும் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்ட மாணவர்கள் மாநில மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளில் அதிக அளவில் பங்கேற்று, அதிக பரிசுகளை வென்று மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும். கலைகளை பொழுதுபோக்கு கலையாக கருதமால் நமது பாரம்பரிய கலைகளை மீட்டெடுக்கும் வகையில் ஆர்வமுடன் பங்கேற்று நமது கலைகளை பாதுகாக்க வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார்.

தொடர்ந்து அரசு பள்ளி மாணவ மாணவியர்களின் கலைநிகழ்ச்சிகளை கலெக்டர் பிரதாப் ஆர்வமுடன் கண்டு களித்தார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பிரின்ஸ் ஆரோக்கியராஜ், மாவட்ட கல்வி அலுவலர்கள் ஜெயராஜ், சௌந்தராஜன், பள்ளி தலைமை ஆசிரியர் தெய்வப்பிரியா, சர்வசிக்ஷா அபியான் திட்ட அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## குமராட்சி காவல் நிலையத்தில் சாட்சியை மிரட்டிய வழக்கில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் கைது .

கடலூர் மாவட்டம், குமராட்சி காவல் நிலையத்தில் கடந்த 2023ஆம் ஆண்டு சாட்சியை மிரட்டியதாக அன்பரசன் என்பவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டிருந்தது. வழக்கில் கைது செய்யப்பட்டு பின்னர் நீதிமன்ற பிணையில் வெளியே வந்த அவர், தொடர்ந்து விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாக இருந்ததாக கூறப்படுகிறது. இதையடுத்து, சிதம்பரம் குற்றவியல் நீதிமன்றம் அன்பரசனுக்கு பிடியாணை (NBW) பிறப்பித்தது. இதனைத் தொடர்ந்து குமராட்சி போலீசார் தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்நிலையில், தலைமறைவாக இருந்த சரித்திர பதிவேடு குற்றவாளியான அன்பரசன் (38), ராமசாமி என்பவரின் மகன், மா.புளியங்குடி, காட்டுமன்னார்கோவில் பகுதியைச் சேர்ந்தவர் என போலீசார் தெரிவித்தனர். அவரை போலீசார் பிடித்து, சிதம்பரம் குற்றவியல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இதையடுத்து, நீதிமன்றம் பிறப்பித்த பிடியாணை நிறைவேற்றப்பட்டதாக குமராட்சி போலீசார் தெரிவித்தனர்

## குமரி கோவில்களில் இனி செல்போன் கொண்டு செல்ல தடை

குமரி மாவட்ட திருக்கோவில்கள் பழமையானவை இந்த கோவில்களுக்கு உள்ளூர் மட்டுமின்றி வெளியூர் பக்தர்களும் பெருமளவு வந்து சாமி தரிசனம் செய்து செல்வது வழக்கம் சில பக்தர்கள் கோவிலுக்குள் வந்து கருவறை உட்பட பல இடங்களில் தங்களை செல்போன் மூலம் ரீல்ஸ் எடுத்து வெளியிடுவது சர்ச்சையை ஏற்படுத்தியது இதனால் கோவிலுக்கு அமைதியாக சாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் அதிக சிரமத்திற்கு உள்ளானார்கள் எனவே இனி கோவிலுக்குள் செல்போன் கொண்டு வருவதை தடை செய்ய வேண்டும் என கோவில் நிர்வாகம் வருகின்ற 1ஆம் தேதி முதல் செல்போன் கோவிலுக்குள் கொண்டு வருவதை தடை செய்து உள்ளது இதன்படி குமரி மாவட்ட திருக்கோவில்களின் நிர்வாகத்தின் கீழ் உள்ள 490 கோவில்களில் முதல் கட்டமாக பழமையான சுசீந்திரம் தாணுமாய சுவாமி கோவில் கன்னியாகுமரி பகுதி அம்மன் கோவில் மண்டைக்காடு பகுதி அம்மன் கோவில் நாகர்கோவில் நாகராஜர் கோவில் வேளிமலை குமாரசுவாமி கோயில் ஆகிய ஐந்து கோவில்களிலும் வருகின்ற 1ஆம் தேதி செவ்வாய்க்கிழமையிலிருந்து பக்தர்கள் செல்போன் கொண்டு செல்ல தடை விதிக்கப்படுகிறது மேலும் பக்தர்கள் கொண்டு வரும் செல்போன்களை பாதுகாக்கும் வகையில் இரும்பு பெட்டகம் அமைக்கப்படுகின்றன ஒரு பெட்டகத்தில் சுமார் 60 அறைகள் உள்ளன ஒருஅறையில்குறைந்தபட்சம் 8 முதல் 10 செல்போன்கள் வைக்கும் வகையில் பெட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது இந்த பெட்டகம் கோவில் நுழைவு வாயில் முன்பு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது ஒரு செல்போனுக்கு ரூபாய் 5 வீதம் கட்டணம் வசூல் செய்யவும் தீர்மானிக்கப்பட உள்ளது தற்போது இந்த ஐந்து கோவில்களிலும் பக்தர்களின் செல்போன்களை பாதுகாப்பதற்கான பெட்டகங்கள் அமைக்கும் பணியில் திருக்கோவில் நிர்வாகம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது படிப்படியாக மீதமுள்ள கோவில்களிலும் இரும்பு பெட்டகங்கள் விரைவில் அமைக்கப்பட உள்ளன மேலும் கோவில் நுழைவு வாயிலில்அருகே செல்போன் பாதுகாப்பு பெட்டகம் வைக்கப்பட உள்ளது மேலும் பக்தர்கள் எளிதில் காணும் வகையில் செல்போன் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள கூடுதல் அறிவிப்பு பலகைகளை வைக்கவும் ஒலி பெருக்கி மூலம் பக்தர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் பக்தர்கள் செல்போன்கள் பயன்படுத்துவதை கண்காணிக்க போதிய பணியாளர்களைநியமிக்கவும் திருக்கோவில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது ஏற்கனவே மதுரை மீனாட்சி அம்மன் கோவில் போன்ற பெரிய கோவில்களில் செல்போன்கள் கோவிலுக்குள் கொண்டு செல்வதற்கு தடை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

# தமிழ் புலிகள் கட்சி சார்பில் விளாத்திகுளத்தில் ஒண்டிவீரன் நினைவு நாள்அனுசரிக்கப்பட்டது



விளாத்திகுளம் ஆகஸ்ட் 21. தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் தமிழ் புலிகள் கட்சி தொகுதி மாவட்ட செயலாளர் கணேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஒண்டிவீரனின் நினைவை போற்றும் வகையில் அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து, அவரது வீரத்தையும், சமூகத்திற்காக ஆற்றிய பங்களிப்புகளையும் நினைவுகூர்ந்து நிர்வாகிகள் மற்றும் கட்சி தொண்டர்கள் மரியாதை செலுத்தினர். நிகழ்ச்சியில் தமிழ் புலிகள் கட்சி துணைச் செயலாளர் கருப்புராஜா, புதூர் ஒன்றிய செயலாளர் வெள்ளைவேந்தன், கிளைச் செயலாளர்கள் பால்பாண்டி, மாரிச்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர். சிறப்பு அழைப்பாளர்களாக அதிமுக ஒன்றிய செயலாளர் பால்ராஜ், திராவிடர் தமிழர் கட்சி மாவட்ட துணைத் தலைவர் முனியசாமி, அகில இந்திய பட்டியல் இளைஞர் அமைப்பு தலைவர் வெள்ளைச்சாமி, தாலுகா செயலாளர் பழனிச்சாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டு ஒண்டிவீரனின் நினைவுக்கு மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள், கட்சி தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# கர்நாடக வனத்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்களின் குடும்பத்தினரிடம் பாமக உண்மை கண்டறியும் குழு விசாரணை
## சிபிஐ விசாரணை நடத்த வலியுறுத்தல்


தருமபுரி ஆக 21 கர்நாடக மாநிலத்தில் மூன்று தமிழர்கள் சுட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக உண்மையை கண்டறிய பாமக சார்பில் முன்னாள் எம்எல்ஏக்கள் வேலுசாமி ,எஸ். பி. வெங்கடேஸ்வரன், கிழக்கு மாவட்ட செயலாளர் அரசாங்கம், மாநில அமைப்பு செயலாளர் சண்முகம், கிருஷ்ணகிரி மாவட்ட நிர்வாகிகள் மஞ்சுநாத், சரவணன் ஆகியோர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவினர் கர்நாடக மாநிலம் சென்று பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர். தொடர்ந்து அந்த பகுதியில் இந்த கொலை சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டனர். இது குறித்து தருமபுரியில் உள்ள பாமக அலுவலகத்தில் முன்னாள் எம்எல்ஏக்கள் வேலுசாமி, எஸ். பி. வெங்கடேஸ்வரன் மற்றும் உண்மை கண்டறியும் குழுவினர் செய்தியாளர்களிடம் கூறியதாவது. கர்நாடக மாநில வனத்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று பேரின் குடும்பத்தாரை சந்தித்து ஆறுதல் தெரிவித்தனர் . பிறகு நடந்த சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளனர். ஆடு ,மாடுகளை வனப்பகுதியில் மேய்த்து விட்டு காணாமல் போன மாடுகளை மூன்று பே,ரும் தேடிச் சென்றுள்ளனர். மாடுகள் கிடைக்காத நிலையில் அதிகாலை ஐந்து மணி அளவில் வனப்பகுதியில் தூங்கிக் கொண்டிருந்தபோது வனத்துறையினர்குமாரை துப்பாக்கியால் சுட்டுள்ளனர். சத்தம் கேட்டு கண் விழித்த அந்தோணி சாமி மற்றும் ஜான்ரோஸ் பீட்டர்ஆகியோரைஅடுத்தடுத்து துப்பாக்கியால் சுட்டுள்ளனர். இது திட்டமிட்டு நடத்தப்பட்ட கொலை இது தொடர்பாக பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு தல ஒரு கோடி இழப்பீடும், அரசு வேலையும் வழங்க வேண்டும். வனத்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்தி உண்மையை வெளி கொண்டு வர வேண்டும். தமிழர்களுக்கு கர்நாடாவில் போதிய பாதுகாப்பு இல்லை. தமிழர்களின் அச்சத்தை போக்க வேண்டும். இந்த சம்பவத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் இதுவரை எந்த கண்டனமும் தெரிவிக்கவில்லை இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.





தருமபுரி மாவட்டம் இலளிகம் ஊராட்சியில் வளர்ச்சி யடைந்த பாரதம் ஊரக வேலை உறுதி மற்றும் வாழ்வாதார திட்டத்தின் புதிய குளம் அமைக்கும் பணியினை மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, வட்டாட்சியர் பிரசன்ன மூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் குமரேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் கோவிந்தசாமி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# சுதந்திரப் போராட்ட தியாகி சத்தியமூர்த்தியின் 139வது பிறந்தநாள்
## மதுரையில் சிலைக்கு மாணிக்கம் தாகூர் மரியாதை



மதுரை, ஆகஸ்ட் 20: மாற்றுக் கட்சிகளில் இருந்து காங்கிரஸில் இணைந்தவர்களை வரவேற்ற பின்னர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக் தாகூர் செய்தியாளர்களை சந்தித்தார்.

தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் அமைச்சருக்கு வாய்ப்பு வழங்கியதற்கு முதலமைச்சர் விஜய்க்கு நன்றி தெரிவித்த அவர், சுற்றுலாத்துறை மேம்படும் என நம்பிக்கை தெரிவித்தார். முதலமைச்சர் விஜய் வருங்கால பிரதமர் என தொண்டர்கள் கூறுவது குறித்து, “தொண்டர்கள் கோஷங்களை பெரிதாக எடுத்துக் கொள்ள தேவையில்லை. எதிர்க்கட்சிகளின் முகம் ராகுல்காந்திதான்” என்றார். எம்எல்ஏக்களுக்கு கார் வழங்கும் அறிவிப்பை வரவேற்ற மாணிக் தாகூர், ஊழல் மற்றும் லஞ்சமற்ற நிர்வாகத்திற்கு தேவையான வசதிகளை அரசு செய்து தர வேண்டும் என தெரிவித்தார். பூரண மதுவிலக்கு காங்கிரஸின் லட்சிய கனவு என்றாலும், நடைமுறையில் சவால்கள் உள்ளதாக கூறிய அவர், கள்ளச்சாராயம் மற்றும் போலி மதுபான விற்பனையை அரசு தடுக்க வேண்டும் என்றார். கர்நாடகாவில் தமிழர்கள் சுட்டுக்கொ ல்லப்பட்ட சம்பவத்தை கண்டித்த அவர், சம்பந்தப்பட்ட வனத்துறை அதிகாரிகளை பணிநீக்கம் செய்து கிரிமினல் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என்றும், உயிரிழந்த குடும்பங்களுக்கு கூடுதல் நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேகதாது அணை விவகாரத்தில், “ஒரு செங்கல் கூட வைக்க தமிழக காங்கிரஸ் அனுமதிக்காது” என திட்டவட்டமாக தெரிவித்த மாணிக் தாகூர், கர்நாடக அரசு தமிழகத்திற்கு உரிய தண்ணீரை திறந்துவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.



# திங்கள்சந்தையில் தாறுமாறாக ஓடிய கார் மோதி விபத்து

திங்கள்சந்தை, ஆக. 20 திங்கள்நகர் குளச்சல் சாலையில் நேற்று சொகுசு கார் ஒன்று சென்று கொண்டிருந்தது. திங்கள்நகர் பிலாக்கோடு ஜங்ஷன் அருகே வந்தபோது டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த கார் தாறுமாறாக ஓடி எதிரில் வந்த காரில் மோதி அருகில் இருந்த மின்கம்பத்தை இடித்து தள்ளி நின்றது. இதில் காரின் முன் பகுதி பலத்த சேதம் அடைந்தது. காரில் இருந்த 2 பேர் காயமடைந்தனர். அவர்களை அக்கம் பக்கத்தினர் மீட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். மின் கம்பிகள் அறுந்து விழாததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. தொடர்ந்து அந்த பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டது. சம்பவ இடம் வந்த இரணியல் போலீசார் போக்குவரத்தை ஒழுங்கு படுத்தினார். இந்த சம்பவத்தால் அந்த பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# வெள்ளிச்சந்தை அருகே வீட்டில் ஓய்வு பெற்ற போலீஸ் எஸ் ஐ சடலம் மீட்பு

குளச்சல், ஆக. 21 வெள்ளிச்சந்தை அருகே மணவிளை பகுதியை சேர்ந்தவர் ஹரிகிருஷ்ண பெருமாள் (75). காவல்துறையில் சப் இன்ஸ்பெக்டராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவரது மனைவி சரோஜினி (65). இந்த தம்பதிக்கு ஒரு மகன், மகள் இருந்தனர். இதில் மகன் இறந்து விட்டார். மகள் கனடா நாட்டில் பணியாற்றி வருகிறார்.

இதனால் ஹரிகிருஷ்ண பெருமாள் தனது மனைவியுடன்தனியாக வசித்து வந்தார். இந்த நிலையில் ஹரிகிருஷ்ண பெருமாள் வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியது. இதனை அறிந்த அக்கம்பக்கத்தினர் இது குறித்து வெள்ளிச்சந்தை போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர. போலீசார்சம்பவ இடத்திற்கு சென்று விசாரித்த போது, அப்போது வீட்டில் இறந்து மூன்று நாட்களாகிய நிலையில் ஹரிகிருஷ்ண பெருமாள் சடலமாககடந்தார். அவர் இறந்தது மனைவிக்கு தெரியவில்லை. வயோதிகம் மற்றும் உடல் நிலை பாதிக்கப்பட்டதால்சரோஜினிக்கு கணவர் இறந்தது தெரியாமல் போய் விட்டது.

இதையடுத்து போலீசார் ஹரிகிருஷ்ண பெருமாள் உடலை மீட்டு பிரேதப் பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் குறித்து சரோஜினி அளித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்துவிசாரணைநடத்தி வருகின்றனர்.




# கோவை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நோயாளிகள் நல சங்க கூட்டம்!

கோவை ஆக:21 பொள்ளாச்சி அரசு தலைமை மருத்துவமனை நோயாளிகள் நல சங்கம் சார்பில் 20252026 க்கான பொதுக்குழு கூட்டம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கூட்டரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கோவை மாவட்ட ஆட்சியர்பவன் குமார் கிரியப்பணவர், சார் ஆட்சியர் ராமகிருஷ்ணசாமி ஆகியோர் தலைமை வகித்தனர். மருத்துவமனை கண்காணிப்பாளர் மருத்துவர் ராஜா அவர்கள் முன்னிலை வகித்தார். கடந்த ஆண்டு மருத்துவமனையில் பல்வேறு வசதிகள் பொதுமக்களுக்காக கொண்டுவரப்பட்டது வரும் காலங்களில் மருத்துவமனையை இன்னும் பல்வேறு கட்டடங்களுக்கு உயர்த்துவதாக தீர்மானிக்கப்பட்டது.

இதில் நோயாளிகள் நலச்சங்க உறுப்பினர்கள் கூறுகையில் நோயாளிகள் நல சங்க உறுப்பினர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல், மருத்துவமனை வளாகத்தை தூய்மையாக வைத்திருக்கக்கூடிய முன்னேற்பாடுகள், நோயாளிகளுக்கு அல்ட்ரா ஸ்கேன் வசதிகளை போன்றவை செய்து தரக்கோரி ஆலோசனைகளை வழங்கினர்.

# தாடிக்கொம்பு அருகே கார் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்தில் உருண்டு விழுந்து விபத்து

திண்டுக்கல், அருகே திண்டுக்கல் கரூர் தேசிய நெடுஞ்சாலையில் செங்குளம் பகுதியில் திண்டுக்கல்லில் இருந்து கரூர் நோக்கி சென்ற கார் ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்து உருண்டு சாலையோர பள்ளத்தில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 4 பேர் காயம் அடைந்து சிகிச்சைக்காக திண்டுக்கல்அரசுமருத்துவக்கல்லூரிமருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

மேற்படி சம்பவம் குறித்து தாடிக்கொம்பு போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்



உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் ஈரோடு மாவட்டம், பெருந்துறை, துடுப்பதி ஊராட்சி, சாணார்பாளையத்தில் குடியிருப்புகளுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரம் குறித்து மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

# ஈரோட்டில் ராஜீவ் காந்தி பிறந்த நாள்: காங்கிரஸ் கட்சியினர் மதநல்லிணக்க நாள் உறுதிமொழி ஏற்பு!



ஈரோடு ஆகஸ்ட் 21 இந்தியாவின் முன்னாள் பிரதமரும், 'பாரத ரத்னா' விருது பெற்றவருமான ராஜீவ் காந்தியின் 82வது பிறந்தநாளைமுன்னிட்டு, ‘சத்பாவனா திவாஸ்’ எனும் மதநல்லிணக்க நாள் உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சி ஈரோட்டில் நடைபெற்றது.

ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான 'ஜவஹர் இல்லத்தில்' நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, முன்னாள் மாவட்டத் தலைவர் ஈ.ஆர். ராஜேந்திரன் தலைமை தாங்கி, ராஜீவ் காந்தியின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப்பிரிவுத் தலைவர் ம. முகமது அர்சத் மதநல்லிணக்க உறுதிமொழியை வாசிக்க, கலந்து கொண்ட நிர்வாகிகள் அனைவரும் அதைத் தொடர்ந்து கூறி உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

நிகழ்ச்சியின் போது, ராஜீவ் காந்தியின் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகளான – தொலைத்தொடர்பு மற்றும் கணினி வழியிலான தொழில் நுட்பப் புரட்சி மூலம் டிஜிட்டல் இந்தியாவிற்கு அடித்தளமிட்டது, இளைஞர்களின் ஜனநாயகப் பங்கேற்பை அதிகரிக்க வாக்களிக்கும் வயதை 21லிருந்து 18 ஆகக் குறைத்தது, மற்றும் பஞ்சாப், அசாம் ஒப்பந்தங்கள் வாயிலாக நாட்டின் அமைதியையும் ஒற்றுமையையும் பாதுகாத்தது ஆகியவை நினைவுகூரப்பட்டன.

இந்நிகழ்வில் மாநில பொதுக்குழு உறுப்பினர் எம். ஞானதீபம், தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில முதன்மை துணைத் தலைவர் எம். ஜவஹர் அலி, மாநகர் மாவட்ட பொதுச் செயலாளர்கள் இரா. கனகராஜன், டெக்ஸ் அன்பழகன், வழக்கறிஞர் ஜெய்ஹிந்த் எஸ். யுவராஜ், ராஜாஜிபுரம் சிவா, வட்டார துணைத் தலைவர் நசியனூர் என்.பி. சுப்பிரமணியம், சென்னிமலை கிழக்கு வட்டாரத் தலைவர் எஸ். இளங்கோவன்,மாவட்டநிர்வாகிகள் கே. தெய்வசிகாமணி, ஏ. நூருதீன், மாவட்ட நெசவாளர் அணி பொதுச்செயலாளர்ஸ்வீட் கனகராஜன், நெசவாளர் அணி மண்டலத் தலைவர் எம்.வி. விஜயராகவன், பிராமண பெரிய அக்ரஹாரம் வாட்டர் சிவாஜி, சூரம்பட்டி வார்டு தலைவர் விஜயகுமார், கனி ராவுத்தர் குளம் என். சபீர் அகமது, NCWC மாவட்ட துணைத் தலைவி ஆர். செல்வி ரவி, மகிளா காங்கிரஸ் நிர்வாகிகள் ஆர். புவனேஸ்வரி, டி. ஜானகி, எஸ். சித்ரா தேவி, எஸ். ஶ்ரீவித்யா உள்ளிட்ட திரளான காங்கிரஸ் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மண்டலம்3, வார்டு44, பழைய பேருந்து நிலையம் எதிரில் ரூ.46.80 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டு வரும் மாநகராட்சி அலுவலக கட்டடத்தின் கட்டுமானப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை தரமாகவும், விரைவாகவும் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். உடன் உதவி செயற்பொறியாளர்கள் ஆறுமுகம், சுப்ரமணி, இளநிலை பொறியாளர் மணிகண்டன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# மார்த்தாண்டம் அருகே கள்ளக்காதல் விவகாரம் ஓய்வு பெற்ற போலீஸ் எஸ் ஐ க்கு வெட்டு
## பல் டாக்டர் மீது வழக்கு பதிவு

மார்த்தாண்டம், ஆக. 21 மார்த்தாண்டம் அருகே கள்ளக்காதல் தொடர்பாக காதலியின் மாமனாரை கத்தியால் வெட்டிய பல் டாக்டர் மீது போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். மார்த்தாண்டம் அருகே உள்ள ஊப்பாறவிளை என்ற பகுதியை சேர்ந்தவர் பாலகிருஷ்ணன் (74). ஓய்வு பெற்ற போலீஸ் எஸ்ஐ ஆவார். இவரது மகன் சதீஷின் மனைவி விலின் சுலேகா என்பவருக்கும் இடவிளாகம் என்ற பகுதியை சேர்ந்த பல் டாக்டர் வினோ பெர்லின் என்பவருக்கும் இடையே தகாத உறவு இருந்து வந்ததாக கூறப்படுகிறது. அதன்படி இரண்டு பேரும் அடிக்கடி தனிமையில் சந்தித்து உல்லாசமாக இருந்து வந்ததாக தெரிகிறது.

இதை அறிந்த சதீஷ் அவரது மனைவி விலின் சுலேகாவை விகாரத்து செய்வதற்காக குழித்துறை நீதிமன்றத்தை நாடி உள்ளார். இந்த வழக்கு தற்போது நிலுவையில் உள்ளது.இந்த நிலையில் சம்பவ தினம் சதீஷ் தந்தை பாலகிருஷ்ணன் மட்டுப்பாவு என்ற பகுதியில் நின்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த பல் டாக்டர் வினோ பெர்லின் பாலகிருஷ்ணனை சரமாரியாக தாக்கி, மேலும் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து பாலகிருஷ்ணனின் தலையில் வெட்டி விட்டு, கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து சென்றுள்ளார்.தாக்குதலில் படுகாயம் அடைந்த பாலகிருஷ்ணனை மீட்ட அக்கம்பக்கத்தினர் அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்த புகாரின் பேரில் மார்த்தாண்டம் போலீசார் பல் டாக்டர் பினோ பெர்லின் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.



தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஊராட்சியில் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள அடுக்கு மாடி குடியிருப்பில் புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர் இணைப்புகளை மாவட்ட ஆட்சியர் சரவணன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, உதவி கோட்ட பொறியாளர் விஜயன், வட்டாட்சியர் பிரசன்ன மூர்த்தி ,அடுக்கு மாடி குடியிருப்பு தொழில்நுட்ப உதவியாளர் மணி, வட்டார வளர்ச்சி அலுவலர் குமரேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் கோவிந்தசாமி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஆம்பூரில் மாபெரும் ரத்த தான முகாம் 50 யூனிட் ரத்தம் சேகரிப்பு



ஆம்பூர்:ஆகஸ்ட்:21, திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் ஆம்பூர் லயன்ஸ் சங்கம் மற்றும் மஜ்ஹருல் உலூம் கல்லூரி ஆம்பூர் இணைந்து, ஆம்பூர் அரசு மருத்துவமனையுடன் இணைந்து நடத்திய மாபெரும் ரத்த தான முகாம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு கல்லூரி முதல்வர் டாக்டர் கே.ஹெச். கலிமுல்லா தலைமை தாங்கினார். ஆம்பூர் லயன்ஸ் சங்கத் தலைவர் லயன் முனீர் அகமது, செயலாளர் லயன் நேதாஜி மற்றும் பொருளாளர் லயன் சலீம் அகமது ஆகயோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் ஆம்பூர் அரசு மருத்துவமனை மருத்துவர் டாக்டர் யோகேஸ்வரன், எம்.எஸ்., ஆர்த்தோ., மாணவர்கள் ரத்த தானம் செய்வதன் அவசியம், அதன் பயன்கள் மற்றும் ரத்த தானத்தின் மூலம் உயிர்களை காப்பாற்ற முடியும் என்பதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

மேலும், லயன்ஸ் சங்க இயக்குநரும் மாவட்டத் தலைவருமான லயன் பிரதோஷ் கே. அகமது மாணவர்களுக்கு சமூக சேவை மற்றும் மனிதநேயத்தின் முக்கியத்துவம் குறித்து நல்வழிகாட்டினார்.

இதனைத் தொடர்ந்து, ட்ரஸ் வேவ்ஸ் பேஷன் சார்பில் ஓம் சக்தி லயன் ஜி. பாபு, ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு 20 தரமான போர்வைகளை வழங்கினார். மாணவர்கள் மேற்கொள்ளும் சமூக சேவையின் முக்கியத்துவத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

இந்த ரத்த தான முகாமில் கல்லூரி மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு 50 யூனிட் ரத்தம் தானமாக வழங்கினர். மேலும், 60க்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு ரத்தப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, அவர்களின் ரத்த வகைகள் தெரிவிக்கப்பட்டன. நிகழ்ச்சியில் கல்லூரி துணை முதல்வர், NSS ஆசிரியர்கள், லயன்ஸ் சங்க இயக்குநர் மற்றும் மாவட்டத் தலைவர் லயன் யு. தமீம் அகமது, லயன் என். தேவராஜன், வட்டாரத் தலைவர் லயன் ஸ்ரீதரன், லயன் கணேஷ்பாண்டியன், மாவட்டத் தலைவர் கருணாநிதி, ஆம்பூர் ஸ்டார் பிரியாணி நிர்வாகி ரைஸ் முகமது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஆம்பூர் அரசு மருத்துவமனை ரத்ததானப் பிரிவு பொறுப்பாளர் சிலம்பரசன் தலைமையிலான மருத்துவக் குழுவினரும் முகாமில் பங்கேற்று ரத்த தான பணிகளை மேற்கொண்டனர்.

# திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் செவிலியர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

## பணி நிரவல் முறையை கைவிட கோரிக்கை



திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் தமிழ்நாடு அரசு நர்சுகள் சங்கம்.மற்றும் ஒருங்கிணைந்த சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் செவிலியர்களுக்கான பணி நிரவல்முறையைகைவிட வேண்டும், அனைத்து எம் ஆர் பி செவிலியர்களையும் பணி நிரந்தரம் செய்திட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி செவிலியர்கள் கோஷங்களை எழுப்பி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரியும் செவிலியர்கள் தமிழ்நாடு அரசு நர்சுகள் சங்கம்.மற்றும் ஒருங்கிணைந்த சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்களுக்கான பணி நிரவல் முறையை கைவிட வேண்டும், அனைத்து எம் ஆர் பி செவிலியர்களையும் பணி நிரந்தரம் செய்திட வேண்டும், செவிலியர் மற்றும் செவிலியர் போதகர் பணியிடங்கள் தொகுப்பூதிய முறையில் உருவாக்கிடாமல் நிரந்தர பணியிடங்களை உருவாக்கிட வேண்டும், நர்சிங் பயிற்றுவிப்பாளர் பதவி உயர்வில் ஏற்கனவே உள்ள நடைமுறையை செயல்படுத்த வேண்டும், மத்திய அரசு மருத்துவமனையில் உள்ளதைப் போன்று செவிலியர் அலுவலர் என பெயர் மாற்றம் செய்ய வேண்டும், செவிலியர்களுக்கான முறையான பணிவரன்முறை வழங்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி செவிலியர்கள் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.மேலும் ஆர்ப்பாட்டம் மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி,நாளை மற்றும் நாளை மறுநாள் நடைபெறும் என செவிலியர்கள் தெரிவித்தனர். ஆர்ப்பாட்டத்தில் திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பணிபுரியும் அனைத்து வகை செவிலியர்கள் 30 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேகம் 2026:

# முன்னேற்பாடு பணிகள் குறித்து மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் சென்று கள ஆய்வு



மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் கும்பாபிஷேகம் 2026 பெருவிழாவினை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகளை, மாவட்ட ஆட்சித் தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., மாநகர காவல் ஆணையாளர் எஸ்.ராஜேந்திரன், இ.கா.ப., மற்றும் மாநகராட்சி ஆணையாளர் கௌரவ்குமார், இ.ஆ.ப., ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வின் போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கிய முக்கிய அறிவுரைகள்:

பக்தர்கள் வருகை மற்றும் பாதுகாப்பு: பக்தர்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கோயிலுக்குள் மற்றும் கோபுரப் பகுதிகளுக்குச் செல்வதற்கான வழிகளை முறைப்படுத்தி,

தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். பக்தர்கள் எவ்வித சிரமமுமின்றி தரிசனம் செய்ய ஏதுவாக தடையற்ற குடிநீர் மற்றும் முறையான சுகாதார வசதிகளை உறுதி செய்ய வேண்டும். சித்திரை மற்றும் ஆவணி மூல வீதிகளில் கூடுதல் தற்காலிககட்டணமில்லா காலணி பாதுகாப்பகங்களை அமைக்க வேண்டும்.

எல்.இ.டி (LED) திரைகள் & பார்க்கிங்: கும்பாபிஷேக நிகழ்வுகளைப் பக்தர்கள் தெளிவாகக் கண்டு தரிசிக்க ஏதுவாகப் போதுமான இடங்களில் LED வண்ணத் திரைகள் அமைக்கப்பட வேண்டும்; அத்துடன் கூடுதல் வாகன நிறுத்துமிட (Parking) வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். பாதுகாப்பு கருதி மின்மாற்றிகளைச் (Transformer) சுற்றி பாதுகாப்பு அரண்கள் அமைக்க வேண்டும். பழுதடைந்த மின்விளக்குகளை உடனடியாகச் சரிசெய்வதோடு, தேவையான இடங்களில் புதிய மின்விளக்குகளைப் பொருத்த வேண்டும்.

திருக்கோயிலைச் சுற்றியுள்ள பிரகாரங்கள் மற்றும் வீதிகளில் உள்ள பழுதடைந்த சாலைகளை உடனடியாகச் சீரமைக்க வேண்டும். பக்தர்கள் எவ்வித இடையூறுமின்றி பாதுகாப்பாகவும், மனநிறைவோடும் தரிசனம் செய்வதை உறுதி செய்யும் வகையில் அனைத்து முன்னேற்பாடுகளையும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளுமாறு தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தினார்.

இக்கள ஆய்வின்போது உதவி செயற்பொறியாளர்கள், மேலாளர்கள், கண்காணிப்பாளர்கள் உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# உணவு பாதுகாப்பு துறை ஆய்வு



சிவகங்கை, ஆக. 21

காரைக்குடி வட்டத்திற்குட்பட்ட பகுதி சாக்கோட்டை. இந்த பகுதியில் தனியார் பேக்கரி ஒன்றில் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனை செய்வதாக தகவல்கள் மற்றும் உணவு பாதுகாப்பு துறைக்கு புகார் மனு சென்றுள்ளது, இதன் அடிப்படையில் வட்டார உணவு பாதுகாப்பு துறை அலுவலர் ஹேமமாலினி, தனியார் பேக்கரிக்கு சென்று சோதனை செய்தார், அதில் தேதி குறிப்பிடப்படாத உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டது, இதனை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, சம்பந்தப்பட்ட தனியார் பேக்கரிக்கு நோட்டீஸ் வழங்கினார், இது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# கன்னியாகுமரியில் வட மாநில வாலிபரிடம் நகை பறிப்பு; 3 பேர் மீது வழக்கு

கன்னியாகுமரி, ஆக. 21

ஆந்திர மாநிலம் நெல்லூர் பகுதியைச் சேர்ந்தவர் சமாடி மாதவா சமந்த் (33). இவர் குஜராத்தில் உள்ள ஒரு தனியார் கம்பெனியில் மெக்கானிக்காக வேலை செய்து வருகிறார். இந்த நிலையில் நேற்று முன்தினம் கன்னியாகுமரியை சுற்றி பார்ப்பதற்காக அவரது நண்பர்களுடன் வந்துள்ளார். அப்போது அவரது பெண் தோழிக்கு பரிசளிப்பதற்காக 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு ஜோடி கம்மலை வாங்கியுள்ளார். பின்னர் கன்னியாகுமரி சன்செட் பாய்ண்டிற்கு சென்றுள்ளார். அங்கு புதிதாக வாங்கிய கம்மலை எடுத்து பார்த்துள்ளார். அப்போது அங்கு பைக்கில் வந்த அடையாளம் தெரியாத மூன்று பேர் சேர்ந்து வட மாநில வாலிபரிடம் இருந்த கம்மலை பிடுங்கி உள்ளனர். இதனால் சத்தம் போட்ட வட மாநில வாலிபருக்கு கொலை மிரட்டல் கொடுத்து விட்டு மூன்று பேரும் அங்கிருந்து தப்பி சென்று விட்டனர்.

பின்னர் இது குறித்து வட மாநில வாலிபர் கன்னியாகுமரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து, அடையாளம் தெரிய தெரியாத மூன்று பேரை தேடி வருகின்றனர்.

# ஈரோடு பூம்புகார் நிறுவனத்தில் ரூ. 8 லட்சம் மதிப்புள்ள விநாயகர் சிலைகள் குவிப்பு



ஈரோடு ஆக 21

தமிழ்நாடு அரசின் நிறுவனமான பூம்புகார் விற்பனை நிலையம் ஈரோடு மேட்டூர்ரோட்டில் செயல்படுகிறது. இங்கு கிருஷ்ண ஜெயந்தி விழாவை முன்னிட்டு கிருஷ்ணர் தர்ஷன் கண்காட்சி மற்றும் விற்பனை 19 ம் தேதி முதல் வருகிற 4 ந் தேதி வரை நடக்கிறது. இந்த கண்காட்சியில் காகித கூழ் கிருஷ்ணர், களிமண் கிருஷ்ணர், பஞ்ச லோகத்தலான கிருஷ்ணர், பித்தளை கிருஷ்ணர், மார்பில் பவுடரால் செய்யப்பட்ட கிருஷ்ணர், அலிகார் பித்தளை கிருஷ்ணர் சிலைகள், தஞ்சை ஓவியத்தில் கிருஷ்ணர், சந்தன மர கிருஷ்ணர் ,கருப்பு மற்றும் வெண் லோகத்திலான கிருஷ்ணர் சிலை பஞ்ச லோக் சிலைகள் போன்றவை விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. குறைந்தபட்சமாக ரூ. 150 முதல் அதிகபட்சமாக ரூ.20 ஆயிரம் வரையிலான கைவினை பொருட்கள் இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது. மொத்தம் ரூ. 8 லட்சம் மதிப்புள்ள கிருஷ்ணர் சிலைகள் இந்த கண்காட்சியில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இத்தகவலை ஈரோடு பூம்புகார் நிறுவனத்தின் மேலாளர் ஜானகி தெரிவித்துள்ளார்.

# திருப்பத்தூர் மாவட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் மாவட்ட ஆட்சித் தலைவர் ரவிகுமார் ஆய்வு



திருப்பத்தூர்:ஆக:21, திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஊராட்சி ஒன்றியம், விஷமங்கலம் ஊராட்சி சித்தேரி பகுதியில் பொதுமக்களுக்கு குழாய் வழியாக விநியோகம் செய்யப்படும் குடிநீரின் தரத்தை உறுதி செய்யும் வகையில், சுகாதாரத் துறையினர் மூலம் குடிநீர் மாதிரி சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு,பொது மக்களுடன் கலந்துரையாடி குறைகள் மற்றும் தேவைகளை கேட்டறிந்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் செள.தமிழரசி, மகளிர் திட்டம், திட்ட இயக்குநர் விஜயகுமாரி, உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) மகாதேவன், முருகன், வட்டாட்சியர் நவநீதன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சித்ரகலா, .லதா மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# நான்கு ஆண்டுகள் நிறைவு; அழகப்பர் ஒரு வள்ளல் துணைவேந்தர் ரவி பேச்சு



காரைக்குடி, ஆக. 20

அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் ரவி, நான்கு ஆண்டுகள் பணிக்காலம் நிறைவடைந்து நாளை பதவியில் இருந்து ஓய்வு பெறுவதையொட்டி, பத்திரிகையாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: "2022 ஆகஸ்டில் துணைவேந்தராக பொறுப்பேற்றேன். இந்த நான்கு ஆண்டுகள் சிறந்த அனுபவத்தை அளித்துள்ளன. பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி செயல்பாடுகள், மாணவர் சேர்க்கை மற்றும் கல்வித் தரம் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளன. தனிப்பட்ட முறையில் எனது ஆராய்ச்சி வெளியீடுகளின் எண்ணிக்கையும் 483 ஆக உயர்ந்துள்ளது.

பல்கலைக்கழகத்திற்கு முறையான அங்கீகாரங்கள் பெறப்பட்டதுடன், தொலைதூரக் கல்வி மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதன் மூலம் பல்கலைக்கழகத்தின் நிதிநிலை மேம்பட்டுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் கடின உழைப்பால் பல்கலைக்கழகத்திற்கு NAACன் A++ (CGPA 3.59) தரச்சான்று கிடைத்துள்ளது.

மேலும், சுமார் 430 ஏக்கர் நிலத்திற்கு பட்டா பெறப்பட்டுள்ளது. 17 ஆயிரம் மரங்கள் நடப்பட்டுள்ளன. நான்கு பட்டமளிப்பு விழாக்கள் நடத்தப்பட்டுள்ளன. குறைந்த எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களைக் கொண்டு சிறப்பான கல்வித் தரத்தை பெற்றுள்ளோம்.

வள்ளல் அழகப்பரின் கொடை மற்றும் தொலைநோக்கு சிந்தனையால்தான் இந்தப் பல்கலைக்கழகம் இன்று உயர்ந்த நிலையை அடைந்துள்ளது. அவருக்கு என்றும் பெருமை சேர்க்கும் வகையில் பல்கலைக்கழகம் தொடர்ந்து செயல்படும்.

நான்கு ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றிய மனநிறைவுடன் விடைபெறுவதாக துணைவேந்தர் ரவி தெரிவித்தார்.

# கிருஷ்ணகிரியில் ராஜீவ்காந்தி பிறந்தநாள்: திருவுருவப் படத்திற்கு காங்கிரஸ் நிர்வாகிகள் மரியாதை



கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 21:

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் பாரத ரத்னா அமரர் ராஜீவ் காந்தியின் 85 வது பிறந்த நாளினை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது, இதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் அலுவலகத்தில் முன்னாள் பாரத பிரதமர் அமரர் ராஜீவ்காந்தியின் 82 வது பிறந்தநாள் விழா சமுக நல்லிணக்க நாளாகக் கொண்டாடப்பட்டது. கிழக்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியின் மாவட்ட துணைத் தலைவர் பி.சி. சேகர் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த ராஜீவ் காந்தியின் திருவுருவப்படத்திற்கு மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் பி.சி. சேகர் மலர் தூவி மரியாதை செலுத்தினார், இதனைத் தொடர்ந்து சேலம் மண்டல ரயில்வே கோட்ட உறுப்பினர் தளபதி ராமத்துல்லா, காங்கிரஸ் கட்சியின் எஸ்சி எஸ்டி துறையின் முன்னாள் மாநில துணை அமைப்பாளர் ஆறுமுக சுப்பிரமணி, நகர மன்ற உறுப்பினர் வினாயகம், மீனவரணி செல்வம், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் அர்னால்டுரமேஷ், மாவட்ட பொதுச் செயலாளர் அப்சல், மாரியப்பன், குட்டி என்கின்ற விஜயராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக முன்னாள் மாவட்ட தலைவர் நாராயணமூர்த்தி, மாவட்ட பொதுச் செயலாளர் டாக்டர் தகி, ஆகியோர் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் அஜித் பாஷா பிரஸ் சரவணன், ஓ.பி.சி மாவட்டத் தலைவர் கவியரசன், பன்னீர் செல்வம், இளைஞர் காங்கிரஸ் சக்திவேல், நகரத் துணைத் தலைவர் வெங்கடாசலம், சதாம் உசேன் , ஜே.கே.பாபு, பாண்டுரங்கன், இஸ்மாயில், சங்கர், வெங்கடேசன், ஏழுமலை, சரவணன், முனுசாமி, ரங்கசாமி, முஸ்தாக்,சக்தி, கவுண்டர் பூபதி, கார்த்திக், சின்னசாமி, ஓய்வு பெற்ற காவல் ஆய்வாளர் பூபதிராஜன், செல்வராஜ், உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸார் கலந்து கொண்டனர். முடிவில் சிறுபான்மை பிரிவு மாவட்ட துணை தலைவர் மூயீன் நன்றியுரையாற்றினார்.

# பள்ளிப்பட்டில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" முகாம்: ரூ.1.09 கோடி மதிப்பில் கடன் மற்றும் நிதியுதவி வழங்கல்



திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டத்தில் இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ச.கவிதா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" சிறப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் கூட்டுறவுத்துறை சார்பில், திருத்தணி சரகம் ஜி.டி. 64 பள்ளிப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மூலம், கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் . பா.ஜெயஸ்ரீ அவர்கள் தலைமையில் புதிய உறுப்பினர் சேர்க்கை முகாம் மற்றும் உறுப்பினர் கல்வித் திட்ட முகாம் நடைபெற்றது.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கவிதா அவர்கள் கலந்து கொண்டு, கொடிவலசா தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் 7 பயனாளிகளுக்கு டாப்செட்கோ திட்டத்தின் மூலம் ரூ.85 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளை வழங்கினார். மேலும், பள்ளிப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.23 லட்சம் மதிப்பிலான கடனுதவிகளையும், அதே சங்கத்தின் 3 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.1.50 லட்சம் மதிப்பிலான நிதியுதவிகளையும் வழங்கினார். இவ்வாறு இம்முகாமில் ஆகமொத்தம் ரூ.1,09,50,000/ மதிப்பிலான கடனுதவிகள் மற்றும் நிதியுதவிகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் திருத்தணி சரக துணைப்பதிவாளர் சி. அமுதா, துணைப்பதிவாளர்(பொது விநியோகத் திட்டம்) கோ.பாலாஜி, கூட்டுறவு சார்பதிவாளர்கள் ம.ராஜ்மோகன், அ.சுப்பிரமணி, பள்ளிப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் பாஸ்கர், மற்றும் சங்கப் பணியாளர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்



உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம் சங்ககிரி சமூகநீதி மாணவியர் விடுதியில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு மேற்கொண்டார்.

# ஓடும் பஸ்ஸில் பயணிகளிடம் பயணச்சீட்டை வாங்கி ஆய்வு செய்த ஈரோடு ஆட்சியர்



ஈரோடு ஆக 21 பெருந்துறை பகுதியில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின்கீழ்ஈரோடுமாவட்ட ஆட்சியர் கந்தசாமி பல்வேறு வளர்ச்சி பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவர் பெருந்துறை நகராட்சி பகுதியிலும் புதிய பஸ் நிலையம் சின்ன மடத்து பாளையம் பகுதிகளில் சாலை விளக்குகள் பராமரிப்பு தொடர்பாக ஆய்வு மேற்கொண்டார். சாணார்பாளையம் பகுதியில் குடிநீர்தரம் குறிக்கும் மற்றும் பல்வேறு இடங்களில் குப்பைகள் சேகரிக்கும் பணி செயற்கை உரம் தயாரிக்கும் மையம் ஆகியவைகுறித்தும்கூட்டுறவு சங்கத்தில் பால் கொள்முதல் செய்வது உட்பட பல்வேறு பணிகளை அவர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பெருந்துறை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மாணவ மாணவிகள் காமராஜரின் காலை உணவு சாப்பிட்டனர். அவர்களிடம் உணவு தரமாக உள்ளதா என்று கேட்டறிந்தார். மேலும் பொதுமக்களுக்கு புதிய மின்னணு குடும்பாட்டை கிளை சிறையில் புத்தகங்கள் இணைய வழி பட்டா ஆகியவற்றை மாவட்ட ஆட்சியர் கந்தசாமி வழங்கினார். மேலும் பெருந்துறை வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் பொது மக்களிடம் குறைகளை கேட்ட அவர் அவர்களிடம் மனுக்களை பெற்று அவற்றை உரிய அதிகாரிகளிடம் கொடுத்து உடனடியாக இந்த மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் பெருந்துறையில் ஓடும் பஸ்ஸில் பயணம் செய்த பயணிகளிடம் பயண சீட்டை வாங்கி ஆய்வு மேற்கொண்டார்.

# ஈரோட்டில் டாக்டர்களின் விழிப்புணர்வு பேரணி




ஈரோடு ஆகஸ்ட் 21 ஈரோடு மகப்பேறு மற்றும் மகளிர் நல மருத்துவர்கள் சங்கம் ( EOGS) சார்பில் ஈரோட்டில் ABHAYA DAY 2026 என்ற நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.


இந்நிகழ்ச்சியையொட்டி முன்னதாக, மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு எதிரான வன்முறையை கண்டித்தும் மருத்துவர்களின் பாதுகாப்பு, மரியாதை கண்ணியம் ஆகியவற்றை வலியுறுத்தியும் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இவ்விழிப்புணர்வு பேரணிக்கு சங்கத் தலைவர் டாக்டர் பூர்ணிமா தலைமை வகித்தார்.

இப்பேரணியில், மருத்துவர்களுக்கு எதிரான வன்முறை தடுப்புக் குழுத் தலைவர் (FOGSI ) டாக்டர் உமையாள் முருகேசன் , EOGS சங்க செயலாளர் டாக்டர் வாணி மாதவன் , முன்னாள் தலைவர் டாக்டர் நான்சி, இந்திய மருத்துவ சங்கம் (IMA) ஈரோடு கிளை தலைவர் டாக்டர் அரவிந்த், டாக்டர் கௌரி சங்கர்,டாக்டர் நவீன், தேசிய IMA டாக்டர் அபுல் ஹசன், டாக்டர் ராஜா, டாக்டர் சுகுமார், ஈரோடு லோட்டஸ் ஹாஸ்பிடல் டாக்டர் உஷா, மாருதி மெடிக்கல் சென்டர் டாக்டர் ரேவதி, டாக்டர் தரணி, டாக்டர் லட்சுமி, டாக்டர் சித்ரா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இப்பேரணி ஈரோடு பெருந்துறை சாலையில் உள்ள காலிங்கராயன் இல்லம் அருகே துவங்கி ஐ.எம்.ஏ. ஹால் அருகே நிறைவடைந்தது.

# ஸ்ரீ செல்வமுத்து மாரியம்மன் திருக்கோவில் 12 ம் ஆண்டு விழா



தருமபுரி ஆகஸ்ட் 21 தருமபுரி அண்ணாமலை கவுண்டர் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ செல்வ முத்து மாரியம்மன் திருக்கோவிலில் 12 ம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு அம்மனுக்கு அதிகாலையில் சிறப்பு அபிஷேகங்கள், ஆராதனைகள், தீபாராதனைகள் நடைபெற்றது. இதை தொடர்ந்து சந்தன காப்பு மற்றும் வெள்ளி கவசத்தில் அம்மன் பக்தர்களுக்கு காட்சியளித்தார். இந்த விழாவில் நகரப் பகுதியில் உள்ள ஏராளமான பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். திருக்கோவில் சார்பில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கான ஏற்பட்டினை விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.


# புவி வெப்பமயமாதலை தடுக்க கோவையில் மாபெரும் மாநாடு



கோவை ஆக:21 இந்தியன் சொசைட்டி ஆஃப் ஹீட்டிங், ரெஃப்ரிஜிரேட்டிங் அண்ட் ஏர்கண்டிஷனிங் என்ஜினியர்ஸ் (இஷ்ரே) அமைப்பு சார்பில் கூல் காங்க்லேவ் 3.0 அகில இந்திய மாநாடு கோவையில் உள்ள ஹோட்டல் மெர்லீஸ் வளாகத்தில் ஆகஸ்ட் 20, 21 மற்றும் 22 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.இது தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு கோவையில் நடைபெற்றது.

அதில் பேசிய இஷ்ரே தலைவர் டாக்டர் சரவணன் பேசும் போது கட்டடங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் வெளியாகும் கரியமில வாயு உமிழ்வைக் குறைத்து,புவி வெப்பமயமாதலைத் தடுப்பதே இம்மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.இதில் இந்தியா முழுவதிலும் இருந்து 1,000க்கும் மேற்பட்ட தொழில் வல்லுநர்களும்,100க்கும் மேற்பட்ட சர்வதேசப் பேச்சாளர்களும் பங்கேற்கின்றனர்.இந்தியா முழுவதும் 100% நிகர பூஜ்ய மின்தேவை இலக்கை அடைய இஷ்ரே பாடுபட்டு வருகிறது. இதன் முன்னோடியாக,கோவை காந்தவயல் அரசு பழங்குடியின மாணவர் உண்டு உறைவிடப் பள்ளிக்கு 100% இலவச சோலார் கட்டமைப்பு ஏற்படுத்தப் பட்டு,கடந்த ஆகஸ்ட் 15 முதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளது.இதேபோலத் தகுதியுள்ள பிற பள்ளிகளுக்கும் இலவச சோலார் இணைப்புகள் வழங்கப்படும் என்று கூறினார்.

இச்சந்திப்பின் போது,டெலாய்ட் நிறுவனத்துடன் இணைந்து தயாரிக்கப்பட்ட வெப்பமயமாக்கும் இந்தியாவைக் குளிர்வித்தல் கையேடும் வெளியிடப் பட்டது.




# 10 மாவட்டங்களில் 10 நாளில் 10 திட்டங்கள் சமிரா குரூப் நிறுவனம் அறிமுகம்

சென்னை, ஆக.21,. சென்னையை தலைமையிடமாக கொண்ட சமிரா குரூப்" ரியல்எஸ்டேட் நிறுவனம் தமிழகத்தில் 10 மாவட்டங்களில், 10 நாளில், 10 திட்டங்கள் என்ற புதிய யுக்தியை அறிமுகப்படுத்தியுள்ளது.

தமிழக ரியல் எஸ்டேட் துறையில் இப்படி ஒரு ''பிரமாண்ட குடியிருப்புத் திட்டங்களை ஆகஸ்ட் 23 முதல் செப்டம்பர் 1 வரையிலான காலக்கட்டத்தில் தமிழகம் முழுவதும் அறிமுகப்படுத்த உள்ளது. இதில் காலி மனைகள் மற்றும் தனி வீடுகள்ஆகியவை அடங்கும் . ரூ 300 கோடி முதலீட்டில் செயல்படுத்தப்படும் இந்த திட்டத்தின் மூலம் தமிழகத்தில் வேகமாக வளர்ந்து வரும் முக்கிய நகரங்களில் சமீரா குரூப் நிறுவனம் தனது வணிகத்தை விரிவுப்படுத்த உள்ளது. இந்த புதிய திட்டங்கள் திருச்சி, மதுரை, திருநெல்வேலி, வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், சென்னை, கிருஷ்ணகிரி, திருவண்ணமலை மற்றும் செங்கல்பட்டு ஆகிய 10 மாவட்டங்களில் விரிவு படுத்துகின்றது.

'இதுகுறித்து சமீரா லேண்ட் & டெவலப்பர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் எம்.சந்தீப் குமார் கூறுகையில், தமிழகத்தில் வளர்ந்து வரும் நகரங்களில் முறையான குடியிருப்பு திட்டங்களுக்கான தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது . இதனை பூர்த்தி செய்யும் வகையில் இந்த புதிய திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட உள்ளன . இதில் பாதுகாப்பான சுற்றுச்சுவருடன் கூடிய வசதிகள், பூங்காக்கள் மற்றும் பிற அடிப்படைவசதிகளுடன்கூடிய வீட்டுமனைகள் மற்றும் தனி வீடுகள் ஆகியவை இடம்பெறும். வாடிக்கையாளர்களுக்கு தரமான வாழ்க்கைச் சூழலையும் மிக சிறப்பான திட்டமிடப்பட்ட குடியிருப்புகளையும் உருவாக்குவதே எங்களின் முக்கிய நோக்கமாகும் என்று தெரிவித்தார் .

சமீரா குரூப் நிறுவனத்தின் அகில இந்திய செயல்பாடுகளின் தலைமை நிர்வாக அதிகாரி டி.செந்தில்வேலன் கூறுகையில், இந்த 10 10 10 திட்டம் பல ஆண்டுகளாக எங்கள் நிறுவனம் தனக்கான வலுவான அடிதளத்தை அமைத்துள்ள தமிழகத்தில் இருந்து தொடங்குகிறது . இனி வருங்காலங்களில் தமிழகத்தை தாண்டி இந்தியாவின் மற்ற நகரங்கள் மற்றும் மாநிலங்களிலும் நாங்கள் கால் பதிக்க திட்டமிட்டு உள்ளோம் . தமிழகத்தில் நாங்கள் பெறப்பெற்ற அனுபவத்தையும் கட்டுமான திறன்களையும் இந்தியா முழுவதும் உள்ள புதிய இடங்களுக்கு கொண்டு செல்வது எங்களின் நோக்கமாகும் என்று அவர் தெரிவித்தார்.

# சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு முகாம்

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், தீன்தயாள் உபாத்தியாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் 18 வயது முதல் 45 வயது வரை உள்ள இளைஞர்கள் மற்றும் மகளிர் இருவருக்கும் தனியார் நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளித்திடும் வகையில் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழி காட்டும் மையத்துடன் இணைந்து வருகிற 22.08.2026 சனிக்கிழமை அன்று நங்கவள்ளி வட்டாரம் கைலாஷ் மகளிர் கல்லூரியில் வேலை வாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது. இதில் அனைத்து இளைஞர்கள் மற்றும் மகளிர் அனைவரும் கலந்து கொள்ளலாம். வேலை வாய்ப்பு முகாமில் எட்டாம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு மற்றும் தொழில்நுட்ப கல்வி தகுதி பெற்ற இளைஞர்கள் ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம். முகாமில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் மற்றும் மகளிர் தங்களுடைய கல்வி சான்றிதழ் நகல், குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டை நகலுடன் வரவும். தங்களுக்கு ஏற்ற வேலை வாய்ப்பினைதேர்வு செய்து பயன்பெறலாம். இந்த முகாமில் டாட்டா எலக்ட்ரானிக்ஸ், பிரிக்கால் லிமிடெட், எம்ஆர்எப் டயர்ஸ் மற்றும் டிவிஎஸ் உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான நபர்களை தேர்ந்தெடுக்க உள்ளனர். எனவே வேலைவாய்ப்பு பெற விரும்பும் நபர்கள் தவறாமல் கலந்து கொண்டு பயனடையுமாறுசேலம்மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் தெரிவித்தார். இந்த முகாம்தொடர்பாகமேலும் விவரங்களுக்கு 0427 2401750, 99437 10025, 94861 59320 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு விவரங்களை தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# குமரியில் சட்டவிரோதமாக தங்கி இந்திய ஆவணங்களை பயன்படுத்திய இலங்கைப் பெண் மீது வழக்கு பதிவு

புதுக்கடை, ஆக.21

இலங்கையை சேர்ந்த கண்டி என்ற பகுதியை சேர்ந்தவர் நிலாந்தி (44). இவர் கடந்த 2006 ஆம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் பகுதியை சேர்ந்த துரை மோனி பொன்னையா என்பவரை இலங்கையில் வைத்து திருமணம் செய்து கொண்டார். பின்னர் 2007 ஆம் ஆண்டு டூரிஸ்ட் விசாவில் இந்தியாவிற்கு வந்துள்ளார்.

இங்கு கருங்கலில்தனது கணவர் வீட்டில் குடும்பத்துடன் வசித்து வந்துள்ளார். இந்த நிலையில் கடந்த 2011 ஆம் வருடம் கணவரின் முகவரியை பயன்படுத்தி நிலாந்தி இலங்கை நாட்டவர் என்கிற அடையாளத்தை மறைத்து, இந்திய அரசு ஆவணங்களான வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் கார்டு, பான் கார்டு ஆகியவற்றை பெற்றுள்ளார். பின்னர் இந்திய வாக்காளர் அடையாள அட்டை பயன்படுத்தி கடந்த ஏப்ரல் மாதம் 23ஆம் தேதி நடந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் கிள்ளியூர் தொகுதியில் வாக்களித்து உள்ளார். இது குறித்து சென்னையில் உள்ள குடியேற்ற துறை அதிகாரிகளுக்கு கிடைத்த புகாரின் பேரில் குடியேற்ற துறை அலுவலர் திருநாவுக்கரசு என்பவர் சென்னை சி சி பி 2 போலீசில் புகார் அளித்தார். போலீசார் இது குதித்து விசாரித்து, அதன் பேரில் தற்போது புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் என்பவர் நிலாந்தி மீது வழக்குப்பதிவு செய்தார். மேலும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# வாணியம்பாடி அருகே குடும்ப தகராறில் கணவனை மனைவி கத்தியால் வெட்டி கொலை செய்து காவல் நிலையத்தில் சரண்




வாணியம்பாடி, ஆக.20 திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி அருகே இளையநகரம் ஊராட்சி பகுதியைச் சேர்ந்த விவசாயி குமார். இவரது மனைவி ரம்யா. இவர்களுக்கு திருமணமாகி 15 ஆண்டுகள் ஆன நிலையில், இரண்டு பெண் குழந்தைகள் மற்றும் ஒரு ஆண் குழந்தை உள்ளனர்.

குமார் தினந்தோறும் மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்து மனைவியுடன் தகராறில் ஈடுபட்டு வந்ததாக கூறப்படுகிறது.

இந்நிலையில், நேற்று நள்ளிரவு மது போதையில் வீட்டிற்கு வந்த குமார், ரம்யாவுடன் மீண்டும் தகராறில் ஈடுபட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த ரம்யா, வீட்டில் இருந்த கத்தியால் குமாரின் கழுத்தில் வெட்டியுள்ளார். இதில் படுகாயமடைந்த குமார் சம்பவ இடத்திலேயே ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து உயிரிழந்தார். சம்பவத்தைத் தொடர்ந்து ரம்யா வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்திற்கு நேரில் சென்று நடந்த சம்பவத்தை கூறி சரணடைந்தார்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வாணியம்பாடி காவல் துணை கண்காணிப்பாளர் மகாலட்சுமி தலைமையிலான கிராமிய காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று குமாரின் உடலை கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும்,சம்பவம்குறித்து காவல்துறையினர் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தகவலின் பேரில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்அக்ஷய்அனில் வாகரே சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை மேற்கொண்டார்.

மது போதையில் கணவன்–மனைவி இடையே ஏற்பட்ட தகராறில், மனைவியே கணவரை கத்தியால் வெட்டிக் கொலை செய்து காவல் நிலையத்தில் சரணடைந்த சம்பவம் வாணியம்பாடி பகுதியில் பெரும் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

# கிருஷ்ணகிரியில் தினசரி மார்க்கெட் கடையில் எப்போது திறக்கப்படும்?



கிருஷ்ணகிரி மாவட்டத்தின் முக்கிய வணிக மையமான சந்தைப்பேட்டையில் தினசரி மார்க்கத்திற்கான புதிய கடைகள் கட்டப்பட்டு திறக்கப்படாததால் வியாபாரிகள் சங்கம் மற்றும் வியாதியார்கள் அதிருப்தியில் உள்ளனர். இதனால் பொதுமக்களும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

கிருஷ்ணகிரி சந்தைப் பேட்டையில் புதியதாக கட்டப்பட்ட 77 கடைகள் 2004 டிசம்பரில் கட்டுமான பணிகள் முடிவடைந்தும் இந்நாள் வரை திறக்கப்படவில்லை. கடைகள் ஒதுக்கீட்டில் பல தரப்பினர் லஞ்சம் கேட்பதாகவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் 58 திறந்தவெளி கடைகளின் வியாபாரிகள் தாங்களே பொருட்களை உள் வைத்து வியாபாரத்தை தொடங்கினார். இதனை அடுத்து அங்கு வந்த போலீசார் வியாபாரிகளிடம் பொருட்களை வெளியில் எடுத்து கடைகளை மூடுமாறு பேச்சுவார்த்தை நடத்தினார்.வியாபாரிகள் போலீசாரிடம் கட்டப்பட்ட கடைகளில் நாங்கள் பயன்படுத்தி வந்த பழைய கடைகளிலேயே எங்களுக்குவழங்கவேண்டும் எனவும் கோரிக்கை வைத்தனர்.

# வேளாண் துறையை கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் போராட்டம்



கிருஷ்ணகிரி மாவட்டப் பகுதிகளில்விவசாயிகளின் பயிர்பாதுகாப்புதொடர்ந்து கேள்விக்குறியாகி வருவதாகக் கூறி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் வேளாண்மை விரிவாக்க மையத்தைக் கண்டித்து வட்டத் தலைவர் முத்துக்குமார் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இப்பகுதியில் நெல் மற்றும் நிலக்கடலை ஆகியவை பிரதான பயிர்களாகச் சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலையில், பயிர்க் காப்பீடு (இன்சூரன்ஸ்) செய்வதில் பல்வேறு சிக்கல்கள் நிலவுவதாக விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். காரீஃப் 2026 பருவத்திற்கான காப்பீடு பதிவுகளில், சாதாரண மற்றும் கிராமப்புற விவசாயிகளுக்கு முறையான தகவல்கள் தெரிவிக்கப்படாமல் காலதாமதம் செய்யப்படுவதாகவும், குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே சலுகைகள் மற்றும் தகவல்கள் முன்கூட்டியே வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், வேளாண்மைத் துறை சார்பில் வழங்கப்பட வேண்டிய மினி கிட் விதை உரம் மற்றும் மானிய பொருட்கள் உள்ளிட்ட விநியோகப் பொருட்கள் தகுதியான விவசாயிகளுக்கு சரியாகச் சென்றடைவதில்லை என்றும், தக்கைப்பூண்டு விதை போன்ற அத்தியாவசியப் பொருட்கள் இல்லை என்று கூறிவிட்டு, போராட்டம் நடத்திய பின்பே 3 டன் இருப்பு இருப்பது தெரிய வந்ததாகவும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

ஊத்தங்கரை வட்டார வேளாண்மைத் துறையில் தொடரும் இத்தகைய முரண்பாடுகளையும் முறைகேடுகளையும் உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும், இல்லையெனில் வேளாண்மை விரிவாக்க மையத்தை முற்றுகையிட்டு தீவிர போராட்டங்கள் நடத்தப்படும் என்றும்தமிழ்நாடுவிவசாயிகள் சங்கம் சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் நார்சம்பட்டி சபாபதி லக்கம்பட்டி ஆறுமுகம் மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# குளச்சல் அருகே பைக்கில் சென்ற கோர்ட் பெண் ஊழியரிடம் நகை பறிக்க முயற்சி

குளச்சல், ஆக. 21 குளச்சல் அருகே பெத்தேல்புரம் பகுதியை சேர்ந்தவர் ஸ்டாலின் வினோ என்பவர் மனைவி கிறிஸ்டி ரோமில் (42). இவர் இரணியல் கோர்ட்டில் ஸ்டேனோவாக பணியாற்றி வருகிறார். சம்பவ தினம் தனது பைக்கில் கிறிஸ்டி சென்று கொண்டிருந்தார். பெத்தேல்புரம் பால்பண்ணை குருசடி பகுதியில் செல்லும் போது பின்னால் ஹெல்மெட் அணிந்து கொண்டு மற்றொரு பைக்கில் வந்த மர்ம நபர் ஒருவர் திடீரென கிறிஷ்டி ரோமில் பைக் அருகே நெருக்கி, அவரது கழுத்தில் அணிந்திருந்த செயினை பறிக்க முயன்றார். இதனை கவனித்த கிறிஸ்டி சத்தம் போட்டார். மேலும் நகையை பறிக்க விடாமல் தடுத்தார்.

இதனால் மர்ம நபர் நகை பறிக்கும் ப முயற்சியை கைவிட்டு அங்கிருந்து தப்பி சென்று விட்டார். இந்த சம்பவம் குறித்து கிறிஷ்டி ரோமில் குளச்சல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து அந்த பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா காட்சிகளை ஆய்வு செய்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.